**கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2022**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக்

கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் மூலதன மானியங்கள் மற்றும் AHEAD செயற்திட்டத்தின் மூலம் கிடைத்திருந்த ரூபா 16,202,111 தொகையான மானியங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | 2023 ஆம் கணக்காண்டின் சரியான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 7,790,020 தொகையான பெற வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் கணக்கு வைக்கப்பட்டிராததுடன், அந்த தவறு மீளாய்வாண்டின் போதும் திருத்தப்பட்டிராத காரணத்தால் பெற வேண்டிய கணக்குகள் மற்றும் திரண்ட நிதியம் அந்த அளவினால்குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு வரையிலும் வருமானங்களை இனங்காணல் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மற்றும் காசு அடிப்படையில் சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளமை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தினை பின்பற்றும் நிறுவனம் என்பதால் அட்டுறு அடிப்படையில் வருமானத்தினை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் நிலையான சொத்துக்கள் மற்றும் உயிரியல் இருப்புகளின் கொள்வனவுகள் ரூபா 12,871,027 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு | 2023 கணக்காண்டின் போது திருத்திய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் என்பது. | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது ஆண்டினுள் காசு வெளிப்பாய்ச்சல்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சலின் கீழ் சொத்துக்களின் கொள்வனவாக ரூபா 14,814,439 காண்பிக்கப்பட்டிருந்தமையால், காசுப்பாய்ச்சல் கூற்றில் அந்த பெறுமதி ரூபா 1,943,411 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | கட்டிடங்கள் அபிவிருத்தி கணக்கிலிருந்து (Building & Structures Rehabilitation) கட்டிடங்கள் கணக்கிற்கு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் கணக்கிற்கு (Other Infrastructure) மாற்றப்பட்டிருந்த சொத்துக்கள் பெறுமானத் தேய்விடப்படாமை மற்றும் சரியான பெறுமானத்தேய்வு வீதங்களுக்கமைய பெறுமானத்தேய்விடப்படாமை காரணமாக மீளாய்வாண்டுக்குரிய ரூபா 750,694 இனால் பெறுமானத் தேய்வு குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரியான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் என்பது. | சரியான பெறுமானத் தேய்வு வீதத்திற்கமைவாக பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் நம்பிக்கைப் பெறுப்பு நிதியத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் பணத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 685,790 ஆன கடன் செலுத்தல்கள் மாணவர்களால் புறக்கணிக்கப்பட்டிந்தது. | கடன் பணத்தை செலுத்தாது புறக்கணித்த மாணவர்களுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பிரிவின் ஊடாக கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைக்கமைய Letter of Demands அனுப்பப்படும் என்பது மற்றும் 06 மாத கால சலுகைக் காலம் கடந்த பின்னர் இறுதி | கடன் தவணையை அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்று நிறுவப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

அறிவித்தலொன்று கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைக்கமைய அனுப்பப்படும் என்பது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1995 யூலை 14 ஆந் திகதி 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடாத்தர்ாட்ட 13 பரீட்சைகளுக்கு பெறுபேறுகளை வழங்குவதிலான தாமதக் காலம் 26 நாட்கள் முதல் 360 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | தற்போது 03 மாதங்களினுள் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றமை. | பரீட்சை பெறுபேறுகள் 03 மாதங்களினுள் வெளியிடப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,663,499 ஆன மிகை ஆனதுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,469,394 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,805,895 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக நிறுவனத்தின் மொத்த வருமானம் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் வேதனங்கள், வழங்கல் செலவினங்கள், நிர்வாகச் செலவினங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

**2.2.1** கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது கன்று விற்பனை வருமானம் ரூபா 5,892,590 இலிருந்து ரூபா 10,158,258 வரையிலும், 72 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனைக் கிரயம் ரூபா 16,925,243 இலிருந்து ரூபா 21,642,848 வரை 28 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. அதற்கமைய தேறிய இலாபம் ரூபா 11,032,653 இலிருந்து ரூபா 11,484 வரை 4 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**2.2.2** கடந்த வருடத்திற்கு ஒப்பாக அரசாங்கத்தின் மீண்டெழும் மானியங்கள் ரூபா 78,170,000 இலிருந்து ரூபா 101,421,000 வரையிலும் 30 சதவீதத்தினாலும், வாடகை வருமானம் ரூபா 388,461 இலிருந்து ரூபா 1,820,310 வரையிலும் 369 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன், ஏனைய மீண்டெழும் செலவினங்கள் ரூபா 8,911,861 இலிருந்து ரூபா 24,028,431 வரை 170 சதவீதத்தினாலும் வழங்கல் செலவினம் ரூபா 3,818,709 இலிருந்து ரூபா 6,777,744 வரை 77 சதவீதம் வரையிலும் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக நடைமுறை சொத்துக்கள் விகிதம் 2.3 சதவீதத்திலிருந்து 1.9 சதவீதம் வரையிலும், விரைவுச் சொத்து விகிதம் 1.8 சதவீதத்திலிருந்து 1.4 சதவீதம் வரையிலும் குறைவடைந்திருந்தமையால் கடந்த வருடத்திற்கு ஒப்பாக நிறுவனத்தின் திரவத்தன்மை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வாழை மற்றும் மஞ்சள் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக ரூபா 16,808,314 ஆன கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த கிரயம் உள்ளடக்கப்படும் வகையில் விற்பனை விலை தீர்மானிக்கப்படாத காரணத்தால் அந்த கன்றுகளை விற்பனை செய்தமையால் ரூபா 6,651,276 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | வெளிநாட்டில் இருந்து மஞ்சள் இறக்குமதி தடையால், உற்பத்திக்கான தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டது, ஆனால் 2022 ஆம் ஆண்டில், மஞ்சள் செடிகளின் தேவை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தது, மேலும் உற்பத்திகளின் விற்பனையில் உள்ள சிரமங்களால் விற்பனை வருமானம் குறைந்தது. | உரிய செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விவசாய தொழில்நுட்பவியலாளர் பாடநெறிக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 1637 மாணவர்களில் 458 மாணவர்கள், அதாவது மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 28 சதவீதம் பாடநெறியை விட்டுச் சென்றிருந்ததுடன், பொருளாதார நெருக்கடி நிலவியமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | பாடநெறியை விட்டு வெளியேறுவதற்கான முக்கியக் காரணம், நிதிச் சிக்கல்கள் காரணமாக பாடக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. | நிதி நெருக்கடியால் படிப்பை பாதியில் நிறுத்தும் மாணவர்களுக்கு சலுகை திட்டத்தை பின்பற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். |